பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 04 புதன்கிழமை 18.01.2023 கதிர் 324

## கொழும்பில் இன்றும் சூடு; ஒருவர் வைத்தியசாலையில்

கொழும்பு, கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் இன்று பகல் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் 2

# தேர்தல் கட்டாயம் நடக்கும் வேட்புமனு முடிந்ததும் திகதி

### உயர் நீதிமன்றத்திற்கு உறுதியளித்தது தேர்தல்கள் ஆணைக்குழு

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வேட்பு மனுக்கள் ஏற்பு ஜனவரி 21ஆம் திகதி முடிவடைந்ததும் தேர்தல் திகதிகள் அறிவிக்கப்படும் என்றும் உடனடியாகவே தேர்தல் நடத்தப்படும் என்றும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு இலங்கை உயர் நீதிமன்றத்திற்கு உறுதியளித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் ஏற்கனவே உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்திற்கு அமைவாகவே நடத்தப்படும் எனவும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உறுதியளித்துள்ளது. 8

## கிளிநொச்சியில் தமிழ் அரசு இன்று வேட்பு மனு தாக்கல்




நடக்கவுள்ள உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்புமனுக்களை கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி கையளித்துள்ளது. கரைச்சி, பச்சிளைப்பள்ளி ஆகிய பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்களே தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2

## மேயர் வேட்பாளராக மீண்டும் ஆனோல்ட்

### தமிழரசுக் கட்சி தீர்மானம்



யாழ்ப்பாணம் மாநகர சபையில் நாளை நடைபெறவுள்ள மேயர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக இம்மானுவேல் ஆனோல்ட்டைக் களமிறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2

## கல்முனை மாநகர சபைக்கான தேர்தல் நடவடிக்கைகளுக்கு

### நாளை வரை இடைக்கால தடை

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர சபைத் தேர்தலுக்கான கட்டுப்பணம் பெறப்படுவதை தடுத்து உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடையை விதித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை எம்.ஏ. மொஹமட் சலீம் என்பவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு மீதான விசாரணையின் அடிப்படையில் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி சபை ஒன்றை உருவாக்காமல் கல்முனை நகர சபைக்குத் தேர்தலை நடத்துவது தனது அடிப்படை உரிமையை மீறுவதாக மனுதாரர் நீதிமன்றத்தில் முறையிட்டிருக்கிறார். வாதங்களைக் கேட்ட நீதியரசர்கள் ஜனவரி 19ம் திகதி வரையில் குறித்த மாநகர சபைத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை நாளைவரை ஏற்கக்கூடாது என்று இடைக்காலத் தடை விதித்தனர்.

மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள கல்முனை மாநகர முதல்வர் மற்றும் சபையின் 2

## வீதியில் கரடியின் சடலம் மாங்குளம் அருகே பரபரப்பு




கொக்காவிலுக்கும் மாங்குளத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் ஏ-9 வீதியில் நேற்றிரவு இறந்த கரடியின் சடலம் காணப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியது. வாகனம் மோதியதில் கரடி இறந்திருக்கலாம் என்று வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

“இந்தப் பகுதியில் விலங்குகள் நடமாட்டமிருப்பதாக பதாதைகள் வைக்கப்பட்டிருக்கின்றபோதிலும் இரவு நேரங்களில் வாகன ஓட்டிகள் அதிவேகமாக வாகனங்களைச் செலுத்திச் செல்வதால் அரிய பல உயிரினங்களை இழக்கவேண்டியேற்படுகிறது. 2

## 26 ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரியப் பணி நியமனம்

### ஏப்ரல் மாதத்துக்குள் என்கிறார் கல்வி அமைச்சர்

நாடு முழுவதும் தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்குக் காணப்படும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப 26 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்கப்படவுள்ளது. கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றத்தில் நேற்று இதனை அறிவித்தார். எதிர் வரும் ஏப்ரல் மாதத்திற்குள் இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது அவர் இதனைத் தெரிவித்திருந்தார். எதிர்க்கட்சி உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் 2

## தமிழ் முற்போக்கு கூட்டணி சில இடங்களில் தனி வழி!



எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் உடன்பாடு எட்டப்படாத மாவட்டங்களில் தமிழ் முற்போக்குக் கூட்டணி தனித்துப் போட்டியிடவுள்ளது.

இது தொடர்பான பேச்சு ஐக்கிய மக்கள் சக்தியுடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று தமிழ் முற்போக்குக் 2

## சந்திரிகா ஆதரவு கட்சியும் யாழ்ப்பாணத்தில் போட்டி

(இ.கலையமுதன்)

தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய கட்சிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்குமான கட்டுப்பணத்தினை இன்றைய தினம் செலுத்தின.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் அந்தந்த கட்சிகளின் பிரதிநிதிகள் குழு கட்டுப்பணத்தைச் செலுத்தியது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்கவின் ஆதரவுடன் தேர்தலில் களமிறங்கும்

‘நவ லங்கா நிதாஸ் பக்சய’ கட்சியும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டு பிரதேச சபைகளுக்கான தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியது.




## 26 ஆயிரம்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பிய கேள்வியொன்றுக்கு அவர் இந்தப் பதிலை வழங்கினார்.

களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். சிங்கள மொழி மூல பாடசாலைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்களுக்குப் பெரும் பற்றாக் குறை நிலவுகின்றது. அதனால் பெருமளவு மாணவர்கள் உயர்தரத்தில் கலைத் துறையையே தேர்ந்தெடுக்கும் நிலை உருவாகிள்ளது. இந்த நீண்ட கால பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும். அது எப்போது நடக்கும்– என்று பாக்கீர் மாக்கார் கேட்டிருந்தார்

பதிலளித்த அமைச்சர், ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் 26 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற 8 ஆயிரம் ஆசிரியர்களையும் இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மூன்றாம் தவணை நிறைவடைவதற்கு முன்பதாக எதிர்வரும் மார்ச் 24 ஆம் திகதிக்கு முன்னர் அந்த நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்த வருடத்தில் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அனுமதி உட்பட அனைத்து அனுமதியும் கிடைத்துள்ளன. அதற்கிணங்க மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகள் மற்றும் மாகாண சபைக்கு உட்பட்ட பாடசாலைகளில் நிலவும் அனைத்து வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

களுத்துறை மாவட்டத்தில் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் பல வருடங்களாக ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதை நாம் அறிவோம். அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்துள்ளோம்.

அந்த நடவடிக்கைகள் நிறைவு பெற்றதும் களுத்துறை மாவட்டம் மட்டுமின்றி நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து தமிழ் மொழி மூல பாடசாலைகளிலும் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார்.

## தமிழ் முற்போக்கு.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இன்று தெரிவித்தார்.

எதிர்வரும் மூன்று நாட்களுக்குள் இறுதித்தீர்மானம்தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வீதியில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுச் சூழலையும் உயிரினங்களையும் பாதுகாக்கவேண்டியது மனிதர்களாகிய எமது பொறுப்பாகும். குறிப்பாக பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள் வழியாக இரவில் வாகனம் ஓட்டும்போது கவனமாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்”, என்று இந்தச் சம்பவம் குறித்து கவலை தெரிவித்துள்ள கிளிநொச்சி வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கல்முனை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களுக்கும் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

2019ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் ஆனதும் சாய்ந்தமருது உள்ளூராட்சி சபையை உருவாக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தார். ஆனால் தெற்கில் அரசியல்வாதிகளிடமிருந்து இதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. முஸ்லிம் பயங்கரவாதிகள் வெடித்து இறந்த சாய்ந்தமருதுக்கு மஹிந்த சபை வழங்கியுள்ளார் என நாடாளுமன்றிலும் ஊடகங்களிலும் கூச்சலிட்டனர்.

இதனைத் தொடர்ந்து மேற்படி வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்தும் பணிகள் இடைநிறுத்தப்பட்டதன. எனினும் இன்னொரு வர்த்தமாணி மூலம் ரத்து செய்யப்படவில்லை.

இவ்வாறு சாய்ந்தமருதுக்கான சபையை உருவாக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தலை ரத்துச் செய்யாத நிலையில் கல்முனைக்கான தேர்தலை நடத்துவது அடிப்படை உரிமை மீறல் என மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

## கொழும்பில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரில் பயணித்த நபர் மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் இன்று 18ஆம் திகதி வரைக்கும் 11 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்தச் சம்பவங்களில் பெண்ணொருவர் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளதுடன் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

## கிளிநொச்சியில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரைச்சிப் பிரதேச சபைக் காக, முதன்மை வேட்பாளராக அருணாசலம் வேழமாலிகிதன் நிறுத்தப்பட்டுள்ளார். வட்டார ரீதியாக 21 பேர் மற்றும் பொது வேட்பாளர்களாக 17 பேர் உள்ளடங்கலாக 38 வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்காக முதன்மை வேட் பாளராக சுப்பிரமணியம் சுரேன் நிறுத்தப்பட்டுள்ளார். வட்டார ரீதியாக 8 பேர் மற்றும் பொது வேட்பாளர்களாக 8 பேர் என 16 வேட்பாளர்கள் நிறுத்தப் பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப் பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான அதிகாரமளிக்கப்பட்ட முகவருமான சிவஞானம் சிறீதரன் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரிடம் நேரில் கையளித்தார்.

## மேயர்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் – மார்ட்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் இன்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ். மாநகர மேயரைத் தெரிவு செய்வதற்கான தெரிவு நாளை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக யாரை நிறுத்துவது என்பது தொடர்பாக நேற்று நடைபெற்ற கூட்டம் இணக்கமின்றி முடிவுக்கு வந்த நிலையில் – இன்று காலை 9 மணிக்கு மீண்டும் கூட்டத்தைக்கூட்டி மேயர் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ். மாநகர மேயர் வேட்பாளரைத் தெரிவு செய்வதில் தமிழரசுக் கட்சிக்குள் வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில், முன்னாள் மேயர் இம்மானுவேல் ஆனோல்ட் ஆகியோரின் பெயர்கள் மேயர் தெரிவுக்கு முன்வைக்கப்பட்ட நிலையில் இம்மானுவேல் ஆனோல்ட்டை மேயர் தெரிவுக்கு நிறுத்த தீர்மானிக்கப்பட்டது.

ஏற்கனவே ஒரு தடவை கட்சியால் ஆர்னோல்ட் நிறுதப்பட்ட நிலையிலேயே மணிவண்ணன் அவரைத் தோற்கடித்து அந்தப் பதவியைக் கைப்பற்றியிருந்தார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சுதந்திரம் என்பது உணர்வு; முதலீடல்ல!

இலங்கை பிரிட்டிாரின் ஆட்சியிலிருந்து விடுபட்டதன் 75ஆவது நிறைவை வரும் மாசி மாதம் 4ஆம் நாள் கொண்டாட உள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குள் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் தேவையா என்கிற சர்ச்சை எழுந்துள்ளது. மக்கள் பெரும் துன்பங்களை எதிர்கொண்டுள்ள நிலையில் பல கோடிகளைச் செலவிட்டு அரசு விழா நடத்தவேண்டுமா என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்புகின்றன. அதற்குப் பதிலளித்த அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சுதந்திர தின கொண்டாட்டச் செலவுகள் எதிர்காலத்திற்கான முதலீடு என்று தெரிவித்திருக்கிறார்.

எதிர்க்கட்சிகளின் கேள்விகள் நியாயமானவை. நாடு மோசமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டெழ முடியாது திணறி வரும் நிலையில் அரசின் செலவுகளை முடிந்த வரையில் குறைத்து பொருளாதார மீள்வருகையை விரைவுபடுத்தவேண்டியதே அரசின் பணி மற்றும் கடமை. அதைவிடுத்து கொண்டாட்டங்களையும் பகட்டையும் காட்டி மக்களை மயக்கி அவர்களைச் சிந்திக்கவிடாமல் செய்வது ஆட்சியாளர்களின் நோக்கமல்ல. ஆனால், வரலாறு முழுவதும் மக்களைத் துன்பங்கள் துயரங்களில் இருந்து மடைமாற்றம் செய்வதற்கு இத்தகைய கேளிக்கை, கொண்டாட்டங்கள் ஆட்சியாளர்களால் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டே வந்திருக்கின்றன. அதையே இன்று ரணில் விக்கிரமசிங்கவும் கையிலெடுத்துள்ளார்.

இந்த நாடு சுதந்திரமானது என்பதை நாட்டு மக்கள் உணரவேண்டும். கடந்த 75 ஆண்டுகளில் நாட்டை ஆண்டவர்கள் மக்கள் அப்படி உணர்வதற்கான ஏதுநிலையை உருவாக்கவில்லை. அதுமிகப்பெரிய தவறு. அதன் விளைவுகளையே இன்று பொருளாதார வீழ்ச்சி வடிவில் ஒவ்வொருவரும் அனுபவித்து வருகின்றனர். வறுமையில் கடனாளியாக இருக்கும் ஒருவர் எப்படித் தான் ஒரு சுதந்திரமானவராக உணர முடியும்? இந்த நாட்டின் தலைவர்கள் மக்கள் அனைவரையும் பெரும் கடனாளிகளாவே ஆக்கி வைத்திருக்கிறார்கள். அத்தகைய நிலையில் மக்கள் எப்படி சுந்திரமானவர்களாக உணர்வார்கள்.

இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களை இரண்டாம் தரக் குடிமக்களாக உணர வைத்திருக்கும் ஆட்சியாளர்கள், அதன் விளைவாக 30 ஆண்டுகள் நீடித்த ஒரு ஆயுத வன்முறைப் போராட்டத்திற்குக் காரணமாக இருந்த ஆட்சியாளர்கள் சுதந்திர தினத்திற்கான செலவுகள் எதிர்காலத்திற்கான முதலீடு என்பது வேடிக்கையிலும் வேடிக்கை.

இனிமேலாவது பகட்டுக் கொண்டாட்டங்களை விடுத்து சுதந்திரத்தின் உண்மையான உணர்வை மக்கள் அனுபவிப்பதற்கான செயல்களில் அரசும் ஆட்சியாளர்களும் கவனம் செலுத்த வேண்டும். அதுவே நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும்.

# ஊடகர்களை நாடாளுமன்றம் அழைத்து விசாரிக்கப் பிரதி சபாநாயகர் கோரிக்கை

## கஞ்சா பயிரிட்டதாக போலிச் செய்தியாம்



எனக்குச் சொந்தமான காணியில் கஞ்சா பயிர்செய்கை செய்வதாக சமூக வலைத்தளங்கள் மற்றும் தேசிய பத்திரிகைகளில் வெளியாகியுள்ள செய்தி முற்றிலும் அடிப்படையற்றது. பொய்யான செய்தி வெளியிட்ட தேசிய பத்திரிகை பிரதானிகளை நாடாளுமன்ற சிறப்புரிமை குழுவிற்குழைக்குமாறு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷசபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்ற அமர்வு இடம்பெற்ற போது சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பொய் செய்தி வெளியிட்ட தரப்பிரனிடமிருந்து 50 கோடி ரூபா நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்ய தான் தீர்மானித்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சமூக வலைத்தளங்களில் பிரபல்யமடைவதற்காகவும், பணம் சம்பாதிப்பதற்காகவும் ஒரு தரப்பினர் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுகிறார்கள். பொய்யான செய்தியால் பாதிக்கப்படும் தரப்பினருக்கு ஏற்படும் விளைவுகள் தொடர்பில் அவர்கள் சிந்திப்பது இல்லை.

சமூக வலைத்தளங்கள் மீதான கட்டுப்பாடு ஏதும் இல்லாத காரணத்தால்தான் விரும்பியதை பதிவேற்றம் செய்யலாம் என்ற நிலை காணப்படுகிறது. காடழிப்பு, இயற்கை வளங்கள் அழிப்பு சட்டவிரோத செயற்பாடுகளுடன் நான் தொடர்புப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் ஆரம்பத்தில் செய்திகள் வெளியாகின.

இந்த செய்தி தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தேன், ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடளித்துள்ளேன்.

இவ்வாறான பின்னணியில் தற்போது எனக்கு சொந்தமான காணியில் எனது மேற்பார்வையின் கீழ் கஞ்சா பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களிலும், ஒரு சில தேசிய பத்திரிகைகளிலும் உறுதிப்படுத்தப்படாத செய்தி வெளியாகியுள்ளன. இந்த செய்தி முற்றிலும் அடிப்படையற்றதாகும்.

இந்த போலி செய்தியால் நாடாளுமன்றத்தின் கௌரவத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. திட்டமிட்ட வகையில் நாடாளுமன்றத்தையும், அரசியல் கட்டமைப்பையும் மலினப்படுத்தும் வகையில் செய்தி வெளியிடும் தரப்பினருக்கு இந்தச் செய்தி சாதகமாக காணப்படுகிறது.

வெளியான செய்தியில் பாதுகாப்பு தரப்பின் உயர் அதிகாரி ஒருவர் தகவல் வழங்கியதாக குறிப்பிடப்படுகிறது. யார் அந்த உயர் அதிகாரி என்பது குறிப்பிடப்படவில்லை.

இந்தச் செய்தியால் நான் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளேன். எனது தரப்பு நியாயத்தை வெளிப்பத்துவது அவசியம், ஆகவே, இந்த செய்தியை வெளியிட்ட ஊடக நிறுவனங்களை நாடாளுமன்ற சிறப்புரிமை குழுவிற்கு அழைக்குமாறு கோரிக்கை விடுக்கிறேன் – என்றார்.

# சுதந்திர தினச் செலவுகள் எதிர்காலத்துக்கான முதலீடு!

## ஜனாதிபதி இப்படி விளக்கம்



சுதந்திர தினக் கொண்டாட்டச் செலவுகள் எதிர்காலத்துக்கான முதலீடாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்காக அரசாங்கம் அதிகளவு செலவு செய்வதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்று சுதந்திரத்திற்குப் பின்னர் எமக்கு 75 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன. சுதந்திரம் அடைந்து 100 வருடங்கள் பூர்த்தியாகும் சந்தர்ப்பத்தில் நாட்டின் மறுசீரமைப்புக்கு அவசியமான பல நிறுவனங்களை உருவாக்க நடவடிக்கை எடுப்போம் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய வரலாறு தொடர்பிலான நிறுவனமொன்றை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வரலாற்றை மறந்து விட்டோம் என்பதே தங்கள் மீது இப்போதுள்ள பாரிய குற்றச்சாட்டு என தெரிவித்துள்ள ஜனாதிபதி, அப்படியானால் அவ்வாறானதொரு நிறுவனத்தை ஆரம்பித்தே ஆக வேண்டும் எனவும் கூறியுள்ளார். அத்துடன், பொருளியல் மற்றும் வர்த்தக நிறுவனமொன்றை நிறுவவுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

# ஓ.எல். பரீட்சையின்போது மின்வெட்டுக்குத் தடை


க.பொ.த உயர்தரப் நடைபெறும் 14 நாட்களுக்கும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் நலன் கருதி எவ்வித இடையூறும் இன்றி நாடு பூராகவும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவை மேற்கோள்காட்டி அமைச்சரவைப் பேச்சாளரும், வெகுஜன ஊடகத் துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவத்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இதனைக் குறிப்பட்டார்.

மேலும், பரீட்சை எழுதும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக நாளொன்றிற்கு 357 மில்லியன் ரூபா வீதம் தொடர்ச்சியாக 14 நாட்கள் மின்சாரம் வழங்குவதற்கு 5 பில்லியன் ரூபா செலவாகும் என்று அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்ததாக அமைச்சரவைப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

# நாட்டின் வரிக் கொள்கைகள் மறுசீரமைக்கப்படவேண்டும்!

## அநுரகுமார கோரிக்கை



மக்களாணை உள்ள அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணத் தயார். பொருளாதாரத்தை முழுமையாக நெருக்கடிக்குள்ளாக்கி நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றவர்கள் சுகபோகமாக இருந்துகொண்டு பொருளாதாரப் பாதிப்பு தொடர்பில் புத்தகம் எழுதுகையில், நாட்டு மக்களை மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் வரி விதிப்பது எந்தளவிற்கு நியாயமானது.

வரிகொள்கை மறுசீரமைக்கப்படவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

அரிசி தேவைக்கு மேலதிகமாக உள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். இருப்பினும் 2022 ஆம் ஆண்டு 10 லட்சம் மெற்றிக்தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மேலதிகமாக அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதால் அரிசி மேலதிகமாக உள்ளது.

வரிதொடர்பில் விசேடகவனம் செலுத்தவேண்டும். தவறான பொருளாதாரக் கொள்கையின் பிரதிபலனை நாடும் நாட்டு மக்களும் தற்போது எதிர்கொண்டுள்ளார்கள்.

பெறுமதி சேர் வரி 15 சதவீதமாகவும், சமூக பாதுகாப்பு அறவீட்டுத் தொகை 2.5 சதவீதமாகவும், கம்பனிகளுக்கான வரி, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வரி 30 சதவீதமாகவும், வங்கி கடன் வட்டி 30 சதவீதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பணவீக்கம் மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் வரி அதிகரிப்பது நியாயமற்றது. பொருளாதாரப் பாதிப்பின் சுமை மக்கள் மீது மோசமாக சுமத்தப்படும்போது பொருளாதார நெருக்கடியை உருவாக்கியவர்கள் பொருளாதாரப் பாதிப்பு தொடர்பில் புத்தகம் எழுதுகிறார்கள்.

இலங்கையின் பொருளாதாரக் குற்றவாளிகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது. பொருளாதாரக் குற்றவாளிகள் சுதந்திரமாக சுகபோகங்களை அனுபவிக்கும்போது மக்கள் மீது வரி சுமையை சுமத்துவது நியாயமற்றது.

பொருளாதாரப் பாதிப்பை தொடர்ந்து மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். கடந்த ஒகஸ்ட் மாதமளவில் 470 மருத்துவர்கள், 500 வங்கி துறைசார் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். பொருளாதாரக் குற்றவாளிகள் சுதந்திரமாக இருக்கும்போது நாட்டுக்காகக் குறைந்த வருமானத்தில் சேவையாற்றிய தொழிற்துறையினர் மீது வரி சுமத்துவது மக்கள் போராட்டத்தைத் தோற்றுவிக்கும்.

சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வங்கி கடன் வரி வீதம் அதிகரிப்பு, மின்கட்டணம் அதிகரிப்பு, மூலப் பொருள்கள் விலையேற்றத்தால் நாட்டின் குடிசைக் கைத்தொழில் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே வரி தொடர்பிலான கொள்கை மறுசீரமைக்கப்படவேண்டும்.

சீனாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதா, அந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் என்ன என்பது தொடர்பில் அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படவேண்டும். – என்றார்.

# ஊழியர்களுக்கு சம்பளம் அதுவே இன்றைய சவால்

## நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

அரச ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதுதான் தற்போது பெரும் சவாலாகக் காணப்படுகிறது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதாரம் கடந்த சில மாதங்களுடன் ஒப்பிடுகையில், கட்டம் கட்டமாக முன்னேறி வருகின்றது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பாக இந்தியாவுடனும் சீனாவுடனும் நாம் தொடர்ந்தும் பேச்சுகளை முன்னெடுத்து வருகிறோம். இந்த நாடுகளுடனான பேச்சுகள் வெற்றியளித்துள்ளன. மிக விரைவிலேயே இதற்கான முறையான பதில் கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம். எவ்வாறாயினும், எமக்கான நிதியுதவிகள் உடனடியாக ஒரே தடவையில் கிடைத்துவிடா.

அரச ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பது தான் தற்போது பெரும் சவாலாகக் காணப்படுகிறது. அடுத்ததாக ஓய்வூதியம் கொடுப்பதும் சவாலானது.

சமுர்த்திக் கொடுப்பனவை வழங்குவதும் அடுத்த சவால். அதேநேரம், நாம் மருந்துகளைக் கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கவில்லை என எம் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது.

10 கோடி ரூபா இதற்காகத் தேவைப்படுவதாக சம்பந்தப்பட்ட தரப்பினர் கூறுகிறார்கள். சுகாதாரத் திணைக்களம், கடந்த சில வருடங்களாகச் செலுத்தாமல் உள்ள 500 கோடி ரூபாவுக்கான பற்றுச்சீட்டு தற்போதும் இருந்து வருகிறது. இது பெரும் பிரச்சினையாகும்.

நாம் இந்த வருடத்துக்கு மாத்திரம் மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்ய 300 – 400 கோடி ரூபாவை ஒதுக்குவோம் என்பதை இங்கே கூறிக்கொள்கிறோம். சுகாதார அமைச்சும் திறைச்சேரியும் இணைந்துதான் இந்தப் பிரச்சினைக் கானத் தீர்வை ஆராய வேண்டும். கடந்த வருடம் எமக்கு உணவுத் தட்டுப்பாடு காணப்பட்டது. இம்முறையும் உணவுத் தட்டுப்பாடு இருக்கும் என்று எதிர்பார்த்த நிலையில், தற்போது விவசாயிகளுக்கு உரம் வழங்கப்பட்டுள்ளமையால் இந்தப் பிரச்சினை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் நாம் நெல் கிலோ ஒன்றின் விலையை 100 ரூபாவாக வைத்துக் கொள்ள வேண்டும். நெல் கொள்வனவுக்காக நாம் 100 கோடி ரூபாவை இம்முறை ஒதுக்கியுள்ளோம்.

75ஆவது சுதந்திர தினத்தை நாம் தற்போது கொண்டாடவுள்ள நிலையில், இந்த அரசியல் கலாசாரத்தை மாற்றியமைப்போம் என்றுதான் அனைத்துக் கட்சிகளுக்கும் தொடர்ச்சியாக அழைப்பு விடுத்து வருகிறேன்.

சவால்களிலிருந்து நாம் ஒன்றிணைந்து வெற்றியடைவோம். எனவே, எதிர்க்கட்சி – ஆளும்கட்சி என பேதம் பாக்காமல் ஒன்றாக செயலாற்ற அனைவரையும் அழைக்கிறேன். – எனத் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் செலவுக்காக பணம் அச்சிடப்படாது!

## பந்துல திட்டவட்ட அறிவிப்பு



நாட்டிலுள்ள நிதி நிலைமையின் அடிப்படையில் இம்முறை உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு 1600 கோடி ரூபா செலவாகக் கூடும். எனினும் தேர்தல் செலவுகளுக்காக பணம் அச்சிடப்படமாட்டாது. கட்டம் கட்டமாகத் திறைசேரியால் இதற்கான நிதி வழங்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று (செவ்வாய்கிழமை) இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர், இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலுக்காக பணத்தை அச்சிட முடியாது. கடன் மறுசீரமைப்பு மற்றும் அத்தியாவசிய கடன்களை மீளச் செலுத்தல் தவிர்ந்த வேறு எந்தவொரு காரணிக்காகவும் பணத்தை அச்சிட அனுமதி வழங்கப்படமாட்டாது.

இதுவே அரசாங்கத்தின் கொள்கையாகும். அரசாங்கத்தின் கொள்கை மீறப்பட்டால் இதனை விட பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்.

கடந்த உள்ளூராட்சி தேர்தலுக்கு 800 கோடி செலவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இம்முறை நாட்டு நிலைமைகளுக்கமைய இந்த செலவுகள் இரு மடங்காக அதிகரிக்கக் கூடும். எனவே இம்முறை 1600 கோடி ரூபா செலவாகக்கூடும். எவ் வாறிருப்பினும் தேர்தல் செலவுகளுக்கான நிதியை கட்டம் கட்டமாக வழங்குவதாக திறைசேறி செயலாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதால் அதற்கு நாம் தயாராகிக் கொண்டிருக்கின்றோம். எவ்வாறிருப்பினும் மின்சாரம் உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது.

எவ்வாறிருப்பினும் ஆணைக்குழுவின் அறிவிப்பிற்கமைய தேர்தலுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. – என்றார்.

# சதி செய்து தேர்தலை ஒத்திவைக்க எதிரணி ஒருபோதும் இடமளிக்காது!

## நாடாளுமன்றில் சஜித் திட்டவட்டம்



அரசின் சதித் திட்டங்களால் உள்ளூராட்சி சபைத் தேர்தலைக் காலம் தாழ்த்த நாம் இடமளிக்கப்போவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டமூலத்தில் சிறு சிறு குறைபாடுகள் இருந்தபோதிலும், பரந்த அர்த்தத்தில் அது ஒரு நல்ல சட்டம். தேர்தல் முறைமை மாற்றத்துக்கு இது முக்கியமானது. சில திருத்தங்கள் இருந்தாலும் பேச்சு மூலம் அதனை மேற் கொள்ள முடியும்.

இந்நாட்களில் உள்ளூராட்சி சபைகளுக்கான கட்டுப்பணம் செலுத்தும் செயன்முறை இடம்பெற்று வருவதால் இந்தச் சட்டம் மிகவும் முக்கியமானதாக இருந்தாலும், இதைச் செயற்படுத்தும் நேரத்தில் சில சிக்கல் உள்ளது. இதன் மூலம் குழப்ப நிலை நிலவுகின்றது.

இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றினால் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு இடையூறாக அமையும்.

இந்தச் சட்டமூலத்தின் வரைவின்படி, வேட்பாளர்கள் தங்கள் செலவுகள் குறித்த முறையான அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காவிடில் அது குற்றமாகும். சமர்ப்பிக்காவிட்டால் மனுவைக் கூட தாக்கல் செய்யலாம். இது மிகவும் நல்ல சரத்து என்றாலும் 2023 மார்ச் தேர்தலில் இது சிக்கலை ஏற்படுத்தும்.

இந்த வரைவு ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், விதிமுறைகள் பிறப்பிக்கப்படும். மார்ச் முதல் வாரத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு இது தடையாக இருக்கும். இதன் ஊடாகத் தேர்தலை ஒத்திவைக்கும் சதித்திட்டத்தை அரசு செயற்படுத்த முயற்சிக்கின்றது. இது மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் செயலாகும்.

இந்தச் சதியில் பங்காளியாக வேண்டாம் என நீதி அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

நிறைவேற்று அதிகாரம் இவ்வாறு சட்டமன்றத்தின் செயற்பாட்டில் தலையிட முடியுமா? – என்றும் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.


காலைக்கதிர் மாலைப்பதிப்பு Kalaikkathir



## பொலிஸ் – காணி அதிகாரங்களை வழங்கி

# 13ஐ முழுமையாக அமுல்படுத்தி நாட்டைப் பிரிக்க இடமளிக்கோம்!

### வழக்கம்போல் சரத் வீரசேகர முழக்கம்



13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி, சமஷ்டிக் கட்டமைப்பை நாட்டில் கொண்டுவரும் தமிழ்க் கட்சிகளின் முயற்சிகளுக்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீடொன்று பற்றியெரியும் போது சுருட்டைப் பற்றவைத்ததைப் போன்று, இன்று சில தமிழ்க் கட்சிகளும் புலம் பெயர் தமிழ் அமைப்புக்களும் ஒரு சில சர்வதேச நாடுகளும் செயற்பட்டு வருகின்றன. நாடு இன்று பொருளாதாரப் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ள நிலையில், நாட்டைத் துண்டாட, நாட்டில் சமஷ்டியை ஏற்படுத்த அவர்கள் முயற்சித்து வருகிறார்கள்.

13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்கள்.

இந்து – லங்கா ஒப்பந்தத்துக்கு இணங்க, வடக்கையும் கிழக்கையும் ஒன்றிணைத்து ஒரு வருடத்துக்குள் சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்குச் செல்ல வேண்டும் என்றே கூறப்பட்டிருந்தது. அது 13ஆவது திருத்த சட்டம் கிடையாது.

அத்தோடு, இந்த ஒப்பந்தத்தில் அதிகாரத்தைப் பரவலாக்கல் தொடர்பாக எதுவும் கூறப்படவில்லை. அப்படியிருக்கையில், எவ்வாறு 13ஆவது திருத்தச் சட்டம் வந்தது? இது இந்தியாவின் தேவைக்காக எம் மீது சுமத்தப்பட்ட ஒன்றாகும்.

இந்தச் சிறிய நாடு 9 மாகாணங்களாகப் பிரிந்து செயற்பட வேண்டிய அவசியம் கிடையாது.

அமெரிக்காவில் 50 மாநிலங்கள் உள்ளன. அங்கு மேற்கு வெர்ஜீனியா மாநிலம் இலங்கையளவு பரப்பளவைக் கொண்ட மாநிலமாகும். அதேபோன்று அமெரிக்காவின் அலஸ்கா மாநிலம் இலங்கையை விடப் பெரும் மாநிலமாகும். இப்படியான மாநிலங்களைக் கொண்ட ஒரு நாட்டில்தான் சமஷ்டி முறைமை தேவைப்படுகிறது.

அதைவிடுத்து, இலங்கை போன்றதொரு சிறிய நாட்டை சமஷ்டியாக்க முற்படுவதானது, இலங்கையை பிரிக்கவேயாகும்.

69 லட்சம் மக்கள் வாக்களித்து, எமக்கு மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையை வழங்கியது, நாட்டில் சமஷ்டியை ஏற்படுத்துவதற்கல்ல.

மாறாக ஒற்றையாட்சியைப் பாதுகாப்பது நாட்டை முன்னேற்றவே என்பதை அனைவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

எனவே, 13ஐ நடைமுறைப்படுத்தி, நாட்டில் சமஷ்டியை ஏற்படுத்தும் தமிழ்க் கட்சிகளின் முயற்சிகளுக்கு நாம் ஒரு போதும் இடமளிக்க மாட்டோம்.

13ஐ நாம் இப்போதும் நடைமுறைப்படுத்தி தான் வைத்துள்ளோம். ஆனால், பொலிஸ் – காணி அதிகாரங்களை வழங்கி ஐக்கிய இலங்கையை பிரிக்க நாம் என்றும் இடமளிக்கப் போவதில்லை. – எனத் தெரிவித்துள்ளார்.

## மாணவர்களுக்கான பற்சிகிச்சை நிலையம் முல்லைத்தீவில் திறப்பு








(ஜெ.ஈழமகன்)

பாடசாலை மாணவர்களின் பல் சுகாதாரத்தை பேணும் நோக்கத்தோடு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் பற்சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் (நிர்வாகம்) , முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர். மு.உமாசங்கர் ஆகியோர் நிலையத்தைத் திறந்துவைத்தனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள் அனைவரும் தங்கள் பற் சுகாதாரத்தினை மேம்படுத்திக் கொள்ள இந்த பற்சிகிச்சை நிலையத்தினைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்த நிகழ்வில் முல்லை வலய பிரதிக்கல்வி பணிப்பாளர் உ.சுரேஸ்குமார், சுகாதார வைத்திய அதிகாரி சிவகனேசன், முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் திரு. ஞா.ஜெபநேசன், பல் வைத்தியர், பாடசாலை ஆசிரியர்கள், பழையமாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், தாதியர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# கூட்டணியில் புதிய நிர்வாகி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வவுனியா மாவட்டத்துக்கான தலைமை நிர்வாகியாக சபேசன் கணேசநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை கட்சியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரியால் இந்த நியமனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. சபேசனே வவுனியா மாவட்டத்தில் கட்சியின் தேர்தல் செயற்பாட்டுக்கு பொறுப்பாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

# யாழ். மாவட்ட செயலர் நேற்று பதவியேற்றார்



(இ.கலையமுதன்)
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாவட்ட செயலாளராக அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண் டார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் காலை 10 மணிக்கு இடம்பெற்ற விசேட நிகழ்வில் பதில் மாவட்ட செயலாளர் ம.பிரதீபனிடம் இருந்து கடமைகளை அவர் பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன யாழ் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், வடமாகாண விவசாய அமைச்சு அலுவலக உத்தியோகத்தர்கள் பிரதேச செயலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## பொங்குதமிழ் நினைவு நாள் யாழ். பல்கலையில் நேற்று



தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பொங்கு தமிழ் பிரகடனத்தின் 22 ஆம் ஆண்டு நிறைவு நேற்று செவ்வாய்க்கிழமை நினைவு கூரப்பட்டது.

மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நிகழ்வு இடம்பெற்றது. கலைப்பீட வளாகத்துக்குள் உள்ள பொங்குதமிழ் நினைவுத் தூபி முன்கூடிய மாணவர்கள் பொங்குதமிழ் பிரகடனத்தை வாசித்தனர்.

இந்த எழுச்சி நிகழ்வில் வைத்துதமிழ் மக்களின் அபிலாஷைகளான சுயநிர்ணைய உரிமை, மரபு வழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பவை அங்கிகரிக்கப்படவேண்டும் என்று மாணவர்கள் வலியுறுத்தினர்.

# வீட்டுக்குள் புதையல் தேடிய 3 பேர் கைது

(எப்.முபாரக்)

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாத்தியாகம பகுதியில் புதையல் தோண்டினார்கள்என்றுகுற்றஞ்சாட்டப்பட்ட மூவரை இம்மாதம் 30ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் இன்று உத்தரவிட்டார்.

வாத்தியாகம, லைட்வீதி மற்றும் காலி பகுதியைச் சேர்ந்த 18, 29 மற்றும் 25 வயதுடைய மூன்று பேரே கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் கந்தளாய் வாத்தியாகம பகுதியிலுள்ள வீடொன்றினுள் புதையல் தோண்டுகின்றனர் என்று கந்தளாய் புலனாய்வு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே மூவரும் கைது செய்யப்பட்டனர். பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்றபோது வீட்டின் சமையலறைப் பகுதியில் இருபது அடிவரை தோண்டப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த இடத்தில் புதையல் இருப்பதாக இறந்துபோய்விட்ட ஒருவர் கனவில் வந்து கூறியதாக புதையல் தோண்டிய மூவரும் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னரும் அந்த வீட்டில் புதையல் தோண்டிய ஐந்திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# அக்கரைப்பற்று நீதிமன்ற தீ வைப்பு சம்பவத்திற்கும் தனக்கும் தொடர்பில்லை என்கின்றார் இனியபாரதி

அக்கரைப்பற்று நீதிமன்ற தீ வைப்பு சம்பவத்திற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்பதுடன் சம்பவம் தொடர்பான விசாரணைக்கு பொலிஸாருக்கு எந்த நேரத்திலும் ஒத்துழைக்கத் தாம் தயாராகவுள்ளார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான இனியபாரதி என்றழைக்கப்படும் குமாரசாமி புஷ்பகுமார் தெரிவித்தார்.

அம்பாறை ஊடக அமையத்தில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது:-

அக்கரைப்பற்று நீதிமன்றத்திற்கு தீ வைக்க வேண்டிய தேவை எனக்கில்லை. நீதிமன்ற களஞ்சியத்திற்கு தீவைக்கின்ற அளவிற்கு சின்ன ஆளும் நான் அல்லா். நாட்டின் சட்டம் என்ன சொல்கின்றதோ, நீதிமன்றத்திற்கு எதிரான செயற்பாட்டில் ஈடுபட்டால் சட்டம் என்ன கூறுகின்றது என்பதை நான் தெளிவாக அறிவேன். 2004 ஆண்டு நாங்கள் கண்ட கண்டவர்களின் கதைகளை கேட்டு செயற்பட்டகாலங்கள் போல் தற்போது செயற்பட நாம் தயார் இல்லை. ஏனெனில் நாங்கள் முதிர்ச்சியடைந்துள்ளோம்.

அதில் அரசியல் மற்றும் சட்ட நீதியாகவும் எமக்கு அனுபவம் உள்ளது. எனவே இவ்வாறான சம்பவத்துடன் பொய்யான பிரச்சாரங்கள் மூலம் என்னைத் தொடர்பு படுத்த வேண்டாம். உண்மை நிலையை அறிய வேண்டியவர்கள் எம்மைத் தொடர்பு கொண்டு மக்களுக்கு தெளிவு படுத்த முன்வர வேண்டும். அத்துடன் நான் இச்சம்பவம் இடம்பெற்ற பின்னர் தலைமறைவாகினேன் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அது உண்மைக்கு புறம்பானது. இச்சம்பவத்திற்கு பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்க தயாராகவுள்ளேன். – எனக் குறிப்பிட்டார்.




# வடக்கு,கிழக்கு எங்கும் மரம் தனித்தே நிற்கும்!

## சம்மாந்துறையில் மு.கா. அறிவிப்பு



முஸ்லிம்களின் எதிர்காலத்தையும், இருப்பையும் தீர்மானிப்பதற்கான அரசியல் முஸ்தீபுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இக்காலகட்டத்தில் ஷ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனேகமான மாவட்டங்களில் தனித்து

மரச்சின்னத்தில் களமிறங்கவுள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஷ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எம்.ஐ.எம். மன்சூர் தெரிவித்தார்.

சம்மாந்துறை மத்தியகுழு உறுப்பினர்களுடன் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் சந்தித்து கலந்துரையாடும் நிகழ்வு சம்மாந்துறை ஜனாதிபதி விளையாட்டுத் தொகுதி மண்டபவத் தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அங்கு தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் முஸ்லிம் காங்கிரஸ் தனித்து நின்று கைப்பற்ற வேண்டும்.

முஸ்லிம்களின் ஒரே குரல் முஸ்லிம் காங்கிரஸ் தான் என்பதை அரசாங்கத்துக்கும், சர்வதேசத்துக்கும் உரத்துக் கூற வேண்டும். அனைத்து பேதங்களையும் மறந்து இந்தத் தேர்தலில் முஸ்லிம்கள் ஷ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸினை பலப்படுத்த வேண்டும் என்றார்.

இந்தத் தேர்தலிலே முஸ்லிம் சமூகத்துக்கு இருக்கின்ற சவால்கள், சதிகள், ஆபத்துக்களை சரிவர விளங்கிக் கொள்ளாமல் எவரும் பிழையான தீர்மானங்களை எடுக்க வேண்டாம். எதிர்வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இம்முறை சம்மாந்துறை பிரதேச சபையின் ஆட்சியை ஷ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்ற வேண்டும். அதற்கு சிறந்த நபர்களை வேட்பாளர்களாக களமிறக்கவுள்ளோம் எனவே, இத்தேர்தலில் கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகளுக்கு அப்பால் சம்மாந்துறை மக்கள் ஐக் கியத்தைக் கடைபிடித்து பெருந்தலைவர் அஷ்ரப் உருவாக்கிய நமது தேசிய விடுதலை இயக்கமான முஸ்லிம் காங்கிரஸை வெற்றி பெறச் செய்ய வேண்டும். – என்றார்.

# தேர்தல் கடமைகளை முன்னெடுக்கும் அலுவலர்களுக்கு பயிற்ச்சி செயலமர்வு



யோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று திரு கோணமலை மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் நடைபெற்றது.

எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி மதியம் 12 மணி வரை வேட்புமனு கையேற்கும் காலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க வேட்பு மனு ஏற்கும் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான பயிற்சி செயலமர்வு நேற்று நடைபெற்றபோதே மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வேட்பு மனு ஏற்கும் கடமைகள் தொடர்பான விடயங்கள் இதன்போது திருகோணமலை மாவட்ட உதவி தேர் தல் ஆணையாளர்(பதில் கடமை) ஆர்.சசீலன் அவர்களால் தெளிவுபடுத் தப்பட்டது.

தமக்கு வழங்கப்பட்ட தேர்தல் கடமைகளையும் பொறுப்புக்களையும் சரியாகவும் வினைத்திறனாகவும் நம்பிக்கையைப் பேணும் வகையிலும் மேற்கொள்ளுமாறு திரு கோணமலை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான பி.எச்.என். ஜயவிக்ரம வேண்டிக் கொண்டார்.

2023 உள்ளூர் அதிகாரசபை தேர் தலில் திருகோண மலை மாவட் டத்தில் வேட்புமனுக்களை கையேற்கும் கடமைகளில் ஈடுபடுத் தப்படவுள்ள உத்தி

# அறுபது மாணவர்களுக்கு சூரிய ஒளி மின் குமிழ்கள்

## மட்டு. றோட்டரிக் கழகம் வழங்கியது




மட்டக்களப்பு றோட்டரிக் கழகம் மட்டு. மேற்கு வலயத்தில் மிகவும் பின்தங்கிய, மின்சாரம் இல்லாத 60 மாணவர்களுக்கு சூரிய ஒளியில் இயங்கும் மின் குமிழ்களை வழங்கி வைத்தது.

மட்டக்களப்பு றோட்டரிக் கழக தலைவர் றோட்டரியன் பி.ரமணதாச தலைமையில் இந்த நிகழ்வு சனிக்கிழமை நடைபெற்றது.

குறிஞ்சாக் கேணி பாவற்கொடிச் சேனை உள்ளிட்ட மூன்று கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கே அவை வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வுகளில், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனக சூரியம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மின் குமிழ்களை வழங்கி வைத்தார். புதிதாக நியமனம் பெற்ற கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலாவுக்கு றோட்டரி கழகத் தலைவர் ரமணன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

# பாட்டாளிபுரம் மாணவர்களுக்கு ஐந்து சைக்கிள்கள் அன்பளிப்பு



திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் வலயக்கல்விப் பணிமனைக்கு உட்பட்ட பாட்டாளிபுரம் பாமகள் தமிழ் வித்தியாலயத்தில் கல்விக் கற்று, க.பொ.த.உயர்தரத்தில் கற்பதற்காக, சேனையூர், மூதூர், இலங்கைத்துறை முகத்துவாரம் மற்றும் பள்ளிக்குடியிருப்பு போன்ற இடங்களுக்குச் சென்று வரும் ஐந்து மாணவர்களுக்குத் சைக் கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பாட்டாளிபுரம் பாமகள் தமிழ் வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் விடுக்கப்பட்ட உதவிக் கோரிக்கைக்கு இணங்க சேனையூர் மத்திய கல்லூரியின் 21 ஆவது அணியினரால் செயற்படுத்தப்படும் நண்பர்கள் கல்வி நலன் புரி அமைப்பினால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. அதற்கமைய இதத அமைப்பின் பிரதிநிதியும் பொதுச் சுகாதாரப் பரி சோதகருமான கோபகன், பாடசாலையின் உப அதிபர் பா.ரஞ்சித் குமார் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு சைக்கிள்களை வழங்கி வைத்தனர்.

# உக்ரைன் உள்துறை அமைச்சர் ஹெலி விபத்தில் உயிரிழப்பு

### மேலும் 15 பேரும் சாவு



உக்ரைன் தலைநகர் கீவ் நகரில் நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் அந்நாட்டு உள்துறை அமைச்சர் டெனிஸ் மொனாஸ்டிரிஸ்கி உயிரிழந்தார். அவருடன் மூத்த அதிகாரிகள் உள்பட 15 பேர் உயிரிழந்தனர். இதனை அம்மாகாண ஆளுநர், தேசிய காவல்துறை தலைவர் ஐகர் க்ளைமென்கோ ஆகியோர் உறுதி செய்துள்ளனர்.

கீவ் நகரின் ப்ரோவாரி என்ற பகுதியில் ஒரு குடியிருப்புக்கு அருகே ஹெலிகாப்டர் ஒன்று விழுந்து நொறுங்கியது. இதில் அருகிலிருந்த மழலையர் பள்ளியைச் சேர்ந்த 2 குழந்தைகள் உள்பட 10 பேர் இறந்தனர் என்று மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

உக்ரைன் மீது கடந்த ஆண்டு பெப்ரவரி 24ஆம் தேதி ரஷ்யா போர் தொடுத்தது. ஓராண்டு நெருங்கவுள்ள நிலையில் இன்னும் அங்கு போர் ஓயவில்லை. இந்நிலையில், இன்று ஹெலிகாப்டர் விபத்தில் அந்நாட்டு உள்துறை அமைச்சர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்திற்கான காரணம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை. இருப்பினும் கடுமையான மூடுபனி காரணமாக விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.



### 30 வருடங்களின் பின்

# பாதாளக் கும்பல் தலைவன் இத்தாலியில் திடீர் கைது

இத்தாலியில் 30 ஆண்டுகளாகத் தேடப்பட்டு வந்த பாதாள உலகக் கும்பல் தலைவர் மெஸ்ஸினா டேனாரோ கைது செய்யப்பட்டுள்ளார். பிரபல நகரங்களில் ஒன்றான பலேர்மோவிலுள்ள தனியார் மருத்துவமனையில் புற்றுநோய்க்குச் சிகிச்சை எடுத்துவந்த நிலையில் மெஸ்ஸினா கைது செய்யப்பட்டிருக்கிறார். அவரது கைது இத்தாலியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மெஸ்ஸினா டேனாரோ தனியார் மருத்துவமனை ஒன்றில் புற்றுநோய்க்காக கிமோதெரபி சிகிச்சையை, பெற்று வந்தார். போலி பெயரில் அவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவரது கைதில் கிட்டதட்ட 100 பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டனர் என்று இத்தாலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மெஸ்ஸினா, இத்தாலியின் மோசமான பாதாளக் கும்பலாக அறியப்படும் கோசா நாஸ்ட்ராவின் தலைவர். பல கொலைகளில் சம்பந்தப்பட்ட மெஸ்ஸினா ஆயுள் தண்டனைக் குற்றவாளி ஆவார். இக்கொலைக் குற்றங்கள் மட்டுமல்லாது போதைப் பொருள் கடத்தல் பண மோசடிகளிலும் மெஸ்ஸினா ஈடுபட்டு வந்தார்.

மெஸ்ஸினாவுக்கு டயாபோலிக் என்ற புனைப்பெயர் உண்டு. டயாபோலிக் என்றால் பிடிக்க முடியாத திருடன் என்று அர்த்தம். அந்த பெயரின் அர்த்தத்துக்கு ஏற்றவாறு பல ஆண்டுகளாக மெஸ்ஸினா இத்தாலியின் புலனாய்வு அதிகாரிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும், பொலிஸாருக்கும் சவாலாக மறைந்து வாழ்ந்து வந்தார். இந்த நிலையில் 30 வருட தேடுதலுக்குப் பிறகு கைது செய்யப்பட்டிருக்கிறார்.



# உலகின் வயதான நபர் 118 வயதில் மறைந்தார்

உலகின் வயதான நபராக அறியப்பட்டுவந்து பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கன்னியாஸ்திரி லூசில் ராண்டன் இயற்கை எய்தினார். அவருக்கு வயது 118. அவரது மறைவை அவருடைய செய்தித் தொடர்பாளர் உறுதி செய்துள்ளார்.

லூசில் ராண்டன், டோலுன் நகரில் தங்கியிருந்தார். சிகிச்சை மையத்தில் தூக்கத்திலேயே அவரது உயிரிழந்தார் என்று செய்தித் தொடர்பாளர் டேவிட் டவெலா தெரிவித்தார்.

இது குறித்து செய்தித் தொடர்பாளர் டேவிட் டவெலா, லூசில் ராண்டனின் மறைவு நிச்சயமாக பெருந்துயர் தான். ஆனால் அவர் இயற்கை எய்தவே விரும்பினார். இறப்பு மூலம் தனது சகோதரருடன் சேரவேண்டும் என்று விரும்பினார். லூசிலுக்கு நிச்சயமாக இது விடுதலை தான் என்றார்.

லூசில் ராண்டான் 1904 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 ஆம் திகதி பிரான்ஸ் நாட்டின் தென் பகுதியில் பிறந்தார். பின்னாளில் கன்னியாஸ்திரியான அவரை அனைவரும் சிஸ்டர் ஆண்ட்ரே என்று அழைத்து வந்தனர். லூசில் பிறந்த ஆண்டில் தான் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் முதல் சப் வே திறக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# திருடியதற்காக அப்கானில் 4 பேரின் கைகள் துண்டிப்பு



ஆப்கானிஸ்தானில் திருட்டுக் குற்றத்திற்காக நான்கு பேரின் கைகள் துண்டிக்கப்பட்டன என்று அந்த நாட்டின் முன்னாள் அமைச்சர் தெரிவித்துள்ளார். இவர்களுக்குக் கசையடி கொடுக்கப்பட்டதாக தலிபான்களின் நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டாலும் நால்வரின் கைகள் துண்டிக்கப்பட்டே தண்டனை நிறைவேற்றப்பட்டது என்று முன்னாள் அமைச்சர் பானா நசிமி தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் 2021 ஓகஸ்ட் முதல் தலிபான்கள் ஆட்சி நடைபெற்று வருகிறது. 1990களில் இருந்தது போல் எங்கள் ஆட்சி இருக்காது என்று தலிபான்கள் அறிவித்தாலும் அங்கு எதுவும் மாறவில்லை. பெண் கல்விக்கு தடை, பெண்கள் வேலை பார்க்கத் தடை, ஆண்கள் அழகாகத் தலைமுடி வெட்டிக்கொள்ள தடை. தாடியை எடுத்தால் தண்டனை. இசை, சினிமா, கேளிக்கைக்கு தடை. பெண்கள் ஆண் துணை இல்லாமல் வெளியே வந்தால் தண்டனை. பெண்கள் முழுமையாக உடலையும் முகத்தையும் மறைக்கும் நீல நிற புர்கா அணியாவிட்டால் தண்டனை என பழைய மாதிரியே தண்டனைகளை, கட்டுப்பாடுகளை கட்டவிழ்த்துள்ளது தலிபான் அரசு. இவர்களின் இந்தப் போக்கால் ஆப்கானிஸ்தான் மிகப்பெரிய மனிதாபிமான நெருக்கடியை சந்தித்துள்ளது. வேலையின்மை, பசி, பட்டினி, நோய், குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் தவிப்பு, தொற்று நோய் பரவல் எனப் பல பிரச்சினைகள் அங்கு தலைவிரித்து ஆடுகின்றன.

இந்நிலையில், நேற்று (செவ்வாய்க்கிழமை) தலிபான்கள் காந்தஹாரில் உள்ள அகமது சாஹி கால்பந்து மைதானத்தில் வைத்து திருட்டில் ஈடுபட்டதாக 9 பேருக்கு கசையடி கொடுத்தனர். இது தொடர்பாக அந்நாட்டு உச்ச நீதிமன்றமும் ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தது. காந்தஹார் மாகாண மக்கள் முன்னிலையில் இந்த தண்டனை நிறைவேற்றப்பட்டதாகவும் ஒவ்வொரு குற்றவாளிக்கும் 35 முதல் 39 கசையடிகள் வழங்கப்பட்டன என்றும் மாநில ஆளுநரின் செய்தித் தொடர்பாளர் ஹாஜி ஜெய்த் கூறினார்.

ஆனால், ஆப்கானிஸ்தானின் முன்னாள் அமைச்சரின் ஆலோசகரான பானா நசிமி தனது ட்விட்டர் பக்கத்தில் அதிரவைக்கும் தகவலை வெளியிட்டுள்ளார். அவர் ட்விட்டரில், காந்தஹார் கால்பந்து மைதானத்தில் பொதுமக்கள் முன்னிலையில் திருட்டில் ஈடுபட்டு கைதான 4 பேரின் கரங்கள் துண்டிக்கப்பட்டன என்று தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் மக்களுக்கு கசையடி, கை, கால் துண்டிப்பது, உயிரை எடுப்பது போன்ற கொடூர தண்டனைகள் தலிபான்கள் கட்டவிழ்த்து விடுகின்றனர் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். சர்வதேச சமூகங்களின் பல்வேறு அறிவுறுத்தல்களுக்கும் மத்தியில் தலிபான்கள் இவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தீவு விற்பனைக்கு

*மத்திய அமெரிக்காவின் நிகராகுவா பகுதியில் அமைந்துள்ள தீவு ஒன்று விற்பனைக்கு வந்துள்ளது.*

*நிகராகுவாவின் ப்ளூ ஃபீல்ட் கடற்கரையில் இருந்து சுமார் 19.5 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள 'தி இகுவானா தீவு'தான் தற்போது விற்பனைக்கு வந்துள்ளது. இதை தீவுகளை விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்று அதன் இணையதளத்தில் வெளியிட்டுள்ளது.*

*5 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்தத் தீவில், மூன்று படுக்கையறைகள், இரண்டு குளியலறைகள் கொண்ட வீடும் இருக்கிறதாம். நீச்சல் குளம் அமைக்கும் வசதியும் உள்ளதாம். சுற்றிலும் தென்னை மற்றும் வாழை மரங்களும் உள்ளனவாம்.*

*அனைத்து திசைகளிலும் நீலம் - பச்சை நிறத்திலான தெளிந்த நீர் சூழ்ந்திருப்பது பார்க்கவே ரம்மியமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் சூரிய உதயம் மற்றும் சூரிய அஸ்தமனத்தை பார்க்கவும், இரவு நேர காட்சிகளும் வியக்க செய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*



## தேர்தல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்கும் நடவடிக்கை இன்று காலை 8.30 மணிக்கு தொடங்கியது. ஜனவரி 21ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை தொடரும்.

இதேவேளை, ஜனவரி 4ஆம் திகதி தொடங்கிய வேட்பாளர்களின் கட்டுப்பணம் ஏற்கும் நடவடிக்கை ஜனவரி 20ஆம் திகதி வரை தொடரும்.

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும் எனத் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு சற்று முன்னர் தெரிவித்திருந்தது.


# ஆயிரத்து 500 பொம்மைகள் சென்னையில் திடீர் பறிமுதல்



ஐஎஸ்ஐ முத்திரை இல்லாத காரணத்தால் சென்னையில் 3 கடைகளில் விற்பனைக்கு வைத்து இருந்த 1500 பொம்மைககளை பிஐஎஸ் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இந்திய தர நிர்ணய அமைவன சட்டம் 2016 பிரிவு 28 இன் படி கடைகளில் பிஐஎஸ் ஸ்டாண்டர்ட் மார்க் (ஐஎஸ்ஐ மார்க்) இல்லாத பொம்மைகளை விற்பனை செய்யக்கூடாது. அப்படி விற்பனை செய்பவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது ரூ. 2 லட்சத்திற்கு குறையாத அபராதம் விதிக்கப்படும். அல்லது பொருட்களின் மதிப்பில் பத்து மடங்கு வரை அபராதம் விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது.

இதன்படி சென்னை ஓ.எம்.ஆர். சாலையில் உள்ள ஹேம்லேஸ், ராயப்பேட்டை, எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் உள்ள ரிலையன்ஸ் பிராண்ட்ஸ் லிமிடெட் ஆகிய இடங்களில் சோதனை செய்தனர். மொத்தம் 1466 (496 எலக்ட்ரிக்கல் மற்றும் 970 எலக்ட்ரிக்கல் அல்லாத பொம்மைகள் (அதாவது மென்மையான பொம்மைகள், லெகோஸ், மோல்டிங் களிமண், ரிமோட் கண்ட்ரோல் பொம்மைகள் என இரண்டும்) பறிமுதல் செய்யப்பட்டன. இதுபோன்று ஓ.எம் .ஆர் (நுனியு) சாலையில் உள்ள நார்த் ஸ்டார் நிறுவனங்களில் (FIRST CRY) நடந்த சோதனையில் மொத்தம் 48 பொம்மைகள் (47 மின்சாரம் அல்லாத பொம்மைகள் மற்றும் 1 எலக்ட்ரிக் பொம்மை) பறிமுதல் செய்யப்பட்டது.




# பணியாளர்களை குறைக்கிறது மைக்ரோசொஃப்ட் நிறுவனம்

தகவல் தொழில்நுட்ப துறை ஜாம்பவானான மைக்ரோசொஃப்ட் பெரு நிறுவனம் மிகப் பெரிய ஆட்குறைப்பு நடவடிக்கைக்கு தயாராகி வருகிறது. கடந்த ஆண்டு ஜூலை மற்றும் ஒக்டோபரில் மைக்ரோசாஃப்ட் நிறுவனம் ஆட்குறைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இந்நிலையில் இந்த ஆண்டு தொடக்கத்திலேயே மீண்டும் ஆட்குறைப்புக்கு அந்நிறுவனம் ஆயத்தமாகி வருகிறது.

உலகம் முழுவதும் இந்நிறுவனத்தில் 2 லட்சம் ஊழியர்கள் உள்ள நிலையில், கடந்த ஆண்டு ஆட்குறைப்பால் ஒரு சதவீதம் பேர் பாதிக்கப்பட்டனர். இந்த ஆண்டு இம்மாதம் திட்டமிடப்பட்டுள்ள ஆட்குறைப்பு கூடுதல் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அலுவலக வட்டாரங்கள் பெயர் தெரிவிக்காமல் சுட்டிக் காட்டியுள்ளன. இந்த முறை மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் பொறியியல் பிரிவிலேயே அதிக வேலையிழப்புகள் இருக்கும் என்று தெரிகிறது.

அண்மையில், ஆட்குறைப்பில் ஈடுபட்ட அமேசான், மெட்டா ப்ளாட்ஃபார்ம்ஸ், சேல்ஸ்ஃபோர்ஸ் போன்ற நிறுவனங்கள் ஆயிரக்கணக்கில் பணியாளர்களை நீக்கியிருந்தன. வாஷிங்டனை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் மைக்ரோசாஃப்ட் அந்த அளவுக்கு ஆட்குறைப்பு செய்யாது என்றும், இருப்பினும் இதுவரை இல்லாத அளவிலான ஆட்குறைப்பாக அந்நிறுவனம் மேற்கொள்ளும் என்றும் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு மைக்ரோசாஃப்ட் பங்குகளின் விலை 23 சதவீதம் சரிந்தது. நேற்று (செவ்வாய்க்கிழமை) நியூயார்க் பங்குச் சந்தையில் மைக்ரோசாஃப்ட் பங்கு மதிப்பு 230.35 டொலராக இருந்தது. இந்த மதிப்பு கடந்த ஆண்டு சரிவில் இருந்து மீண்டதற்கான எந்த அறிகுறியையும் காட்டாததால் ஆட்குறைப்பு அவசியமானது என்று அலுவல தரப்பு கூறுகின்றது.

அதேபோல் இந்தாண்டு பணிக்கு புதிதாக ஆள் சேர்ப்பதும் மூன்றில் ஒரு பங்காக குறையும் என்று தெரிவித்துள்ளது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.01.2023 இல் வெளியிடப்பெற்றது.